Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.942/2025

**Depositions of PW- 3**

| Name | திரு. பாரதிராஜா | Occupation | காவல் ஆய்வாளர் |
|---|---|---|---|
| Father's name | சீனிவாசன் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 19th day of June 2026.

19.06.2026

எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது சங்கரன்கோவில் உட்கோட்டம் பனவடலி சத்திரம் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.10.2024 அன்று மம்சாபுரம் காவல்நலைய சார்பு ஆய்வாளராக இருந்தபோது மதுவிலக்கு குற்ற தடுப்பு ரோந்து காவலாக காலை 08.00 மணிக்கு காவல்நிலையத்திலிருந்து புறப்பட்டு நானும், தகா1609 காளிராஜன், தகா2058 சரவணன் ஆகியோர் மம்சாபுரம் காவல்நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ரோந்து சுற்றி வரும்போது காலை 10.00 மணிக்கு மம்சாபுரம் திருவில்லிபுத்தூர் மெயின்ரோட்டில் உள்ள எஸ்பிஎஸ் தேங்காய் பட்டறை அருகில் பின்னர் பெயர் விலாசம் தெரிந்த மம்சாபுரம் ராஜாமணி நாடார் தெருவை சேர்ந்த பால்பாண்டியன் மகன் கணேஷ்குமார் வயது 37/24 என்பவர் போலீஸ் பார்ட்டியாகிய எங்களை கண்டதும் நகர்ந்து செல்ல முயன்றவரை நிறுத்தி அவர் கையில் வைத்திருந்த பையை வாங்கி சோதனை செய்ததில் 180 எம்எல் அளவுள்ள ஓரியன் பிராந்தி 10 மதுபான பாட்டில்கள் மற்றும் 180 எம்எல் அளவுள்ள மெக்லேன் பிராந்தி 16 பாட்டில்கள் மேற்படி நபர் அரசால் தடைசெய்யப்பட்ட லாபம் கருதி அரசு மதுபான பாட்டில்களை வைத்திருந்த குற்றத்தினை சொல்லி கையில் வைத்திருநத பாட்டில்களை தனிநபர் யாரும் இல்லாததால் அதே இடத்தில் அத்தாட்சி தயார் செய்து

போலீஸ் பார்ட்டிகளாகிய தகா1609 காளிராஜன், தகா2058 சரவணன் ஆகியோர் சாட்சிகளாக அத்தாட்சியில் கையெழுத்து செய்தனர். பின்னர் காரணம் கூறி கைது செய்து 11.00 மணிக்கு நிலையம் கொண்டு குற்ற எண்.165/2024 பிரிவு.4(1)(C) TNP Act ன் கீழ் வந்து வழக்கு பதிவு செய்து எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். **முதல் தகவல் அறிக்கை அசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மேற்படி போலீஸ் பார்ட்டிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரியை தக்க இருநபர் பிணையில் விடுவித்தேன். அத்தாட்சியில் கைப்பற்றப்பட்ட மதுபாட்டில்களை 03.12.2024 அன்று விருதுநகர் மதுவிலக்கு கூடத்தில் அழிப்பதற்காக அனுப்பி வைத்து பின்னர் பாட்டில்களை அழித்து சான்றிதழ் பெறப்பட்டது. பின்னர் விசாரணையில் எதிரியின் மேற்கண்ட செயல் பிரிவு.4(1)(C) TNP Act பிரகாரம் குற்றம் புரிந்துள்ளார் என்று தெரியவந்தது எனவே எதிரி மீது பிரிவு.4(1)(C) TNP Act ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையானது 18.10.2024 அன்று பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பொதுவாக முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்யப்பட்ட 24 மணிநேரத்தில் சம்மந்தப்பட்ட நீதிமன்றத்திற்கு அதனை அனுப்பவேண்டும் என்றால் சரிதான். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையானது 14.08.2025 அன்று தான் இந்நீதிமன்றத்திற்கு வந்துள்ளது என்றால் சரிதான். மேற்படி 10 மாத காலதாமதத்திற்கான காரணம் பற்றி என்னால் கூற இயலாது என்றால் சரிதான். அத்தாட்சியில் எதிரி வைத்திருந்ததாக கூறப்படும் மதுபாட்டில்கள் வைக்கப்பட்டிருந்ததாக கூறப்பட்டுள்ள வெள்ளை நிற பை இந்நீதிமன்றத்தின் முன் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். அசா.1 ஐ விசாரித்தபோது எதிரி 16 மானிட்டர் மதுபான பாட்டில்களை வைத்திருந்ததாக முதல் விசாணையில் கூறிய சங்கதிகளை எனது விசாரணையில் கூறினாரா என்றால் இல்லை.

திருவில்லிபுத்தூரில் மதுவிலக்கு அமலாக்க பிரிவு தனியாக உள்ளது என்றால் சரிதான். மேற்படி மதுவிலக்கு அமலாக்க பிரிவினர் திருவில்லிபுத்தூர் சுற்றுவட்டார பகுதிகள் அனைத்திலும் ரோந்து மேற்கொள்வார்கள் என்றால் சரிதான். மேற்படி சம்பவம் நடந்ததாக கூறப்படும் தேதியில் நானும் மேற்படி காவலர்களும் ரோந்து மேற்கொண்டோமா என்று எங்கள் காவல்நிலைய பொதுநாட்குறிப்பேட்டை பார்த்தால்

தெரியவரும் என்றால் சரிதான். மேற்படி சம்பவம் நடந்ததாக கூறப்படும் எஸ்பி எஸ் தேங்காய் பண்ணையின் எந்த திசையில் எதிரி நின்றுகொண்டிருந்தார் என்பது பற்றி முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரி எஸ்பிஎஸ் தேங்காய் பண்ணையின் வாசல் முன்பு நின்றுகொண்டிருந்தார். மேற்படி எஸ்பிஎஸ் தேங்காய் பண்ணையின் உரிமையாளர் பெயர் வெங்கடேஷ் ஆகும். மேற்படி எஸ்பிஎஸ் தேங்காய் பண்ணையின் உரிமையாளர் பெயர் தங்கச்சாமி என்றாலும் அவரது பெயர் முகவரி மற்றும் புகைப்படம் போன்ற பலகை ஒன்று மேற்படி எஸ்பிஎஸ் தேங்காய் பண்ணையில் வாசலில் உள்ளது என்றாலும் நான் இவ்வழக்கிற்காக மேற்படி பண்ணையின் உரிமையாளர் பெயர் வெங்கடேஷ் என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அதுபற்றி எனக்கு நியாபகமில்லை.

சம்பவ சமயத்தில் மேற்படி எஸ்பிஎஸ் பண்ணையின் உரிமையாளரையோ அல்லது அங்கு வேலை செய்பவர்களையோ நான் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடமானது திருவில்லிபுத்தூரிலிருந்து மம்சாபுரம் செல்லும் சாலை என்றால் சரிதான். மேற்படி சம்பவம் நடந்ததாக கூறப்படும் நேரத்தில் சம்பவயிடம் அருகே நிறைய நபர்கள் சென்றுகொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். உண்மையில் மேற்படி சம்பவம் நடந்திருந்தால் அத்தாட்சியில் மேற்படி எஸ்பிஎஸ் பண்ணையின் காவலாளியிடமோ உரிமையாளரிடமோ, அங்கு வேலை செய்பவர்களிடமோ அல்லது மேற்படி ரோட்டில் சென்றுகொண்டிருந்தவர்களிடமோ சாட்சியாக கையெழுத்து பெற்றிருப்பேன் என்றாலும் அவ்வாறு நடைபெறாததால் தான் மேற்படி நபர்கள் யாரிடமும் கையெழுத்து பெறப்படவில்லை என்றால் சரியல்ல.

மேற்படி எஸ்பிஎஸ் தேங்காய் பண்ணையிலிருந்து 100 மீட்டர் தொலைவில் அரசு மதுபானக்கடை உள்ளது என்றால் சரிதான். அதன் அருகே அரசால் அங்கீகரிக்கப்பட்ட பார் உள்ளது என்றால் சரிதான். மேற்படி பாரின் ஒப்பந்ததாரர் பெயர் G.சங்ணமுகராஜ் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மாதந்தோறும் நடத்தப்படும் ரோந்தின் அடிப்படையில் புள்ளிவிவரத்திற்காக இவ்வழக்கை எதிரி மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி பாரில் இவ்வழக்கின் எதிரி வேலை செய்தது பற்றி எனக்கு தெரியும் என்றால் சரிதான். மாதந்தோறும் நாங்கள் பதிவு செய்யும் வழக்கிற்காக மேற்படி ஒப்பந்ததாரர் சண்முகராஜ் மற்றும் இவ்வழக்கின் எதிரியை காவல்நிலையம்

வரவழைத்து மேற்படி நபர்களையே மதுபான பாட்டில்களையும் எடுத்து வரச்சொல்லி அதனை அத்தாட்சியில் கைப்பற்றியுள்ளோம் என்றால் சரியல்ல. மேற்படி காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்ட அத்தாட்சியில் மேற்படி தலைமை காவலர்கள் காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

மேற்படி சொன்ன நேரததில் சொன்ன விதத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரியிடமிருந்து மேற்படி மதுபான பாட்டில்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. மேற்படி நான் கூறியவாறு எந்தவித சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் எதிரி எந்தவித குற்றமும் செய்யவில்லை என்றாலும் எதிரி மீது பொய்யாக இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.